பக்கங்கள் 22 + 05

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## 30 எம்.பிக்களுக்கு விசாரணைக் குழு எச்சரிக்கைக் கடிதம்

சொத்துப் பொறுப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்கத் தவறிய 30 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விசாரணைக் குழு எச்சரிக்கைக் கடிதங்களை 02

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆடி 04 சனிக்கிழமை 20.07.2024 அதிர்வு 355



பலவிதமான தகைமைகள் இருந்தாலும்

# தமிழ்த் தேசிய உணர்வு சுமந்திரனிடம் இல்லை

## இப்படிச் சாடுகின்றார் விக்கி

(எஸ்.நிதர்ஷன்)

"இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருக்கின்ற என்னுடைய அருமை மாண வன் எம்.ஏ.சுமந்திரன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய உணர்வு அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளை யினால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ - உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர்." 02

# அலி சப்ரி ரஹீம் எம்.பி. இன்று கைதாகிப் பிணையில் விடுவிப்பு

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், இன்று காலை கைது செய்யப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வழக்கு ஒன்றுக்கு ஆஜராகாத நிலையில் இருந்த மேற்படி நாடாளுமன்ற உறுப்பினரை உடனடியாகக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு புத்தளம் மேலதிக மாவட்ட நீதிபதியும், மாவட்ட நீதிவானுமான திருமதி 03





# குதிரை சின்னத்தில் களமிறங்கும் ரணில்?



வரும் ஜனாதிபதித் தேர்தலில் தேசிய வேட்பாளராகக் களமிறங்கவுள்ள ரணில் விக்கிரமசிங்க, பொதுச் சின்னமாக குதிரை சின்னத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பொதுக் கூட்டணியின் பெயர், சின்னம் என்பன பற்றிய இறுதிக் கட்ட கலந்துரையாடல் தற்போது இடம்பெற்று வருகின்றது.

யானை, அன்னம் மற்றும் மொட்டு என்பன பொதுச் சின்னமாக இருக்கக் கூடாது எனப் பெரும்பாலானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதனால் பொதுச் சின்னமாக குதிரை சின்னத்தை தேர்ந்தெடுப்பது பற்றி ஜனாதிபதி ரணில் ஆராய்ந்து வருகின்றார். கப்பல் சின்னத்தை ஏற்குமாறும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனினும், பொருளாதார போரில் வெல்வதற்குக் குதிரை போல் வேகமாகப் பயணிக்கக்கூடிய ஒருவரே தேவை என்ற பிரசாரம் குதிரை சின்னம் மூலம் முன்னெடுக்கப்படவுள்ளது.

# பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான ஒப்பந்தம் திங்கட்கிழமை கைச்சாத்து?

(எஸ்.நிதர்ஷன் )

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று எதிர்வரும் திங்கட்கிழமை கைச்சாத்திடப்படவுள்ளது.

தமிழ்ச் சிவில் சமூகத்தினருக்கும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கு இடையிலும் இந்த உடன்படிக்கை யாழ்ப்பாணத்தில் வைத்து கைச்சாத்திடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கும் வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என்று தமிழ்க் கட்சியினரும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும், தமிழ் மக்களின் பிரச்சினைகள், தேவைகளை வெளிப்படுத்தும் வகையிலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் இதற்குப் பல்வேறு அமைப்புகளும் பல்வேறு கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ள நிலையில் இதன் அடுத்த கட்டமாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும், சிவில் சமூகத்தினருக்கும் இடையில் முதலாவதாக ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இவ்வாறு இரு தரப்பினர்களுக்கும் இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தமிழ்த் தேசிய...

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, "தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாட்டுக்குத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை அழைத்திருக்கின்ற நிலையில் எதிர்காலத்தில் அவருடன் சேர்ந்து பயணிப்பதற்குச் சாத்தியங்கள் இருக்கின்றனவா?" – என்று ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே விக்னேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற முறையிலும், தமிழ்த் தேசிய உணர்வுகளைக் கொண்டவர்கள் என்ற முறையிலும் எங்களுக்கும் சிறீதரனுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்கின்றது.

இந்த விதத்திலே என்னுடைய அருமை மாணவன் எம்.ஏ.சுமந்திரன் பலவிதமான தகைமைகளைக் கொண்டிருந்தாலும் தமிழ்த் தேசிய உணர்வு அவருக்கு இல்லை. அவர் எல்லாவற்றையும் மூளையினால் பார்ப்பாரே ஒழிய உணர்வினாலோ – உணர்ச்சியினாலோ பார்க்கக் கூடியவர் அல்லர்.

அந்தவிதத்தில் தமிழரசுக் கட்சியினுடைய தலைவராகச் சிறீதரன் வருவதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதனையே வரவேற்கின்றோம்.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியத்துக்காகக் குரல் கொடுத்து வருகின்ற ஒருவர் என்ற முறையிலே அவரை நாங்கள் அழைத்திருக்கின்றோம். அதே போன்றுதான் பேராசிரியர் கணேசலிங்கத்தையும் அழைத்திருக்கின்றோம்.

ஆகவே, தமிழ்த் தேசியத்தின் அடிப்படையிலே நாங்கள் முன்னோக்கிச் வேண்டும் என்பதால் அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை." – என்றார்.

### 30 எம்.பிக்க...

அனுப்பியுள்ளன.

30 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை தமது சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கையைச் சமர்ப்பிக்கவில்லை என்று நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சொத்துக்கள் மற்றும் கடன்கள் குறித்த அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 67 ஆகும்.

சொத்துப் பொறுப்புச் சட்டத்தின்படி, ஒவ்வொரு உறுப்பினரும் ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 30ஆம் திகதிக்கு முன் சபாநாயகரிடம் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் குறித்த அறிவிப்பைச் சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகள் ஆணைக்குழு சட்டத்தின்படி, சொத்து அறிக்கையைச் சமர்ப்பிக்காத நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்க அதிகாரம் உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகள் குறித்து கிழக்கு ஆளுநர் - சிறீதரன் எம்.பி. சந்திப்பு



(எஸ்.கீதபொன்கலன்)

தமிழ்ச் சமூகம் எதிர்கொள்ளும் தற்போதைய பிரச்சினைகள் குறித்து கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான கலந்துரையாடல் கிழக்கு மாகாண ஆளுநரின் மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது பெருந்தோட்டத் தமிழர்களுக்கும் வடக்கு மற்றும் கிழக்குத் தமிழர்களுக்கும் இடையில் வலுவான நட்புறவை வளர்ப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

## அலி சப்ரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அயோனா விமலரத்ன கற்பிட்டி சுற்றுலா நீதவான் நீதிமன்றில் வைத்து திறந்த பிடியாணை ஒன்றை கடந்த 8 ஆம் திகதி பிறப்பித்திருந்தார்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இன்று காலை 9.30 மணியளவில் கற்பிட்டி பொலிஸ் நிலையத்துக்கு ஆஜராகச் சென்றிருந்த போது, அவர் கைது செய்யப்பட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரைப் புத்தளம் மாவட்ட பதில் நீதிவான் இந்திக தென்னக்கோன் முன்னிலையில் பொலிஸார் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை இரண்டு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதி வழங்கி உத்தரவிட்டார்.

அத்துடன், எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை கற்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீமுக்குப் பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சார்பில் சட்டத்தரணிகளான முஹம்மது இப்திகார் மற்றும் முஹம்மது அஸீம் ஆகிய இருவரும் ஆஜராகியிருந்தனர்.

கற்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறிஞ்சிப்பிட்டியில் அமைந்துள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றின் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தியமை தொடர்பில் பொறுப்புக் கூறும் வழக்கு கடந்த 8 ஆம் திகதி கற்பிட்டி சுற்றுலா நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் குறித்த வழக்கு விசாரணைக்குச் சமூகமளிக்காத நிலையில், நீதிவான் இவ்வாறு கைதுக்கான திறந்த பிடியாணை உத்தரவை வழங்கியிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுதலை செய்யப்பட்ட புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில்,

“கற்பிட்டி – குறிஞ்சிப்பிட்டி பகுதியில் உள்ள மஸ்ஜிதுக்குச் சொந்தமான மதரஸா கட்டடம் ஒன்றைத் தனியார் நிறுவனம் ஒன்று கடந்த ஆறு வருடங்களுக்கும் மேல் பலவந்தமாகக் கையகப் படுத்தி தமது சொந்தச் சொத்தாக வைத்திருப்பதாக அந்தப் பகுதியில் உள்ள மக்கள் எனக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இது தொடர்பில் கற்பிட்டி பிரதேச செயலாளர் உட்பட கலாசார அமைச்சும் குறித்த கட்டடத்தை மஸ்ஜித் நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்குமாறும் சம்பந்தப்பட்ட தரப்பினரைக் கேட்டுக்கொண்டனர். எனினும், குறித்த நிறுவனம் அந்த மதரஸாக் கட்டடத்தை உரிய தரப்பினரிடம் ஒப்படைக்காமல் காலத்தை இழுத்தடித்துக் கொண்டே போனது. அமைப்பொன்று மதராவுக் காக வக்பு செய்த அந்தக் கட்டடத்தைத் தமக்கு ஏற்றவாறு அந்த நிறுவனம் மாற்றியமைத்தும் கொண்டது.

இதனையடுத்து, மஸ்ஜித் நிர்வாகத்தினரையும், அந்த அரச சார்பற்ற நிறுவனத்தையும் அழைத்துப் பேசினேன். அந்தச் சந்தர்ப்பத்தில் அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள் எமது கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்காமல் பேசிய விடயங்களையே பேசிக் கொண்டே இருந்தனர்.

அப்போது அங்கு அமைதியின்மையும் ஏற்பட்டது. அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு பொலிஸாரும் வருகை தந்திருந்தனர்.

இதன்போது அங்கு இருந்த பிரதேச மக்களுடன் இணைந்து குறித்த அரச சார்பற்ற நிறுவனம் பலவந்தமாகக் கையகப்படுத்தி வைத்திருந்த மஸ்ஜிதுக்குச் சொந்தமான மதரஸா கட்டடத்தை இழுத்து மூடி அதன் திறப்பை கற்பிட்டிப் பொலிஸாரிடம் ஒப்படைத்தோம்.

இதனைக் காரணம் காட்டி அந்த அரச சார்பற்ற நிறுவனத்தினர் எனக்கு எதிராக வழக்கு ஒன்றைத்தாக்கல்செய்திருந்தனர்.

கடந்த 8 ஆம் திகதி அந்த வழக்கு விசாரணைகளுக்காக எடுக்கப்பட்டது. அன்றைய தினம் நிகழ்வொன்றுக்குப் பிரதமர் புத்தளத்துக்கு வருகை தந்தார். நானும் அந்த நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டியிருந்ததால் என்னால் வழக்கு விசாரணைக்காகச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இது பற்றி கற்பிட்டி பொலிஸ் நிலைய நீதிமன்றப் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் அறிவித்தேன்.

எனினும், அன்றைய தினம் எனக்கு எதிராக நீதிமன்றம் பிடியாணை ஒன்றைப் பிறப்பித்திருந்தது. எப்போதும் சட்டத்தை மதித்துச் செயற்படும் நான் கற்பிட்டி பொலிஸ் நிலையத்துக்குச் சென்று ஆஜராகியபோது அவர்கள் என்னைக் கைது செய்து பதில் நீதிவான் முன்னிலைப்படுத்தியபோது பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றேன்.

சமூகத்துக்காகப் பணியாற்றும்போது, அந்த மக்களுக்காகக் குரல் கொடுக்கும் போது இவ்வாறான சோதனைகள் வருவது வழக்கமாகும். நாட்டின் சட்டத்தையும் மதிக்க வேண்டும். எங்களை நம்பியிருக்கும் பொதுமக்களின் கோரிக்கைகளையும் நிறைவேற்ற வேண்டும். நான் என்ன பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தாலும் மக்களுக்கான சேவையைத் தொடர்ந் தும் முன்னேடுப்பேன்.” – என்றார்.





# தேசிய கால்பந்தாட்ட அணியில் தெல். மகாஜன வீராங்கனைகள்!







**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

இந்திய கால்பந்தாட்ட சம்மேளனமும் இந்திய விமானப்படையும் இணைந்து நடத்தும் 2024 ஆம் ஆண்டுக்கான சர்வதேச கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை 17 வயதுப் பெண்கள் தேசிய அணியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் 4 வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர்.

இந்தப் போட்டி ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி இந்தியாவில் ஆரம்பமாகவுள்ளது.

இந்த அணியில் யசோதரன் கல்சிகா, கேதீஸ்வரன் றேனுஜா, யோகானந்தராசா உமாசங்கவி மற்றும் சயந்தன் கியுஸ்ரிகா ஆகிய வீராங்கனைகள் இடம்பிடித்துள்ளனர்.

இந்த தேசிய அணியின் உதவிப் பயிற்றுனராக கல்லூரியின் புகழ்பூத்த கால்பந்தாட்டப் பயிற்றுனர் சிவமகாராசா சாந்தகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.



# மீன்களின் விலைகள் வீழ்ச்சி!

**(பாறுக் ஷிஹான்)**

திடீர் காலநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா, சூரை, கிளவல்லா மீன்கள் என கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு பல லட்சம் வரை விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு மருதமுனை மற்றும் கல்முனை சாய்ந்தமருது பகுதிகளில் கீரி இன மீன்கள் இன்று அதிகளவாக கரைவலைகளுக்கு பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

குறித்த கீரி மீன்கள் ஒரு கிலோ சுமார் 300 முதல் 400 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.

தற்போது மருதமுனை கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ் கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில் கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய, பாரிய மீன்கள் தொகுதியாகப் பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதே வேளை சாய்ந்தமருது பிரதேச கடற்கரையோரங்களில் கெலவல்லா, வலயா போன்ற மீன்கள் விற்பனை செய்யப்படுவதுடன் ஆர்வத்துடன் பொது மக்கள் கொள்வனவிலும் ஈடுபட்டுள்ளனர்.

வலயா ஒரு கிலோ 400 ரூபா தொடக்கம் 500 ரூபா வரையும் கெலவல்லா ஒரு கிலோ 1,000 ரூபா என்ற விலையிலும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது.

ஆழ்கடல் மீன்பிடிக்குச் செல்பவர்கள் இவ்வாறான மீன்களை எடுத்து வந்து விற்பனை செய்கின்றனர்.


Muhurtham Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
88.9 HD3 & 105.9
PRINTING PARTNER
INK DRIP
E PAPER PARTNER
முரசு
DESIGN BY
DESIGN WOLF.CA

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலின் அக்கப்போர்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் கேலிக் கூத்துத்தனம் அதன் தற்போதைய ஆட்சியின் முடிவு கட்டத்திலும் அப்பட்டமாக வெளிப்பட்டு வருகின்றது.

ஜனாதிபதி ரணிலின் தற்போதைய அரசின் பதவிக்காலம் வரும் ஜனாதிபதி தேர்தல் வரைத்தான். இன்னும் 12 முதல் 14 வார காலம்தான்.

இந்த அரசில் நீதி, சிறை துறை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ.

அரசமைப்பு திருத்தம் ஒன்று தொடர்பான சட்டப் பிரேரணை இந்தத் தேர்தல் காலத்தில் நாடாளுமன்றத்திற்குக் கொண்டுவரப்படுவது வீண் அரசியல் குழப்பங்களைத் தரும், அது பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டு, அந்த திருத்தத்தை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டாம் என்று நீதி அமைச்சின் செயலாளருக்கு நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு விவகார அமைச்சர் உத்தரவிடுகின்றார்.

ஆனால் அதனை மீறி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றது.

அரசு முன்னெடுக்கும் அரசமைப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பில் நாட்டின் அரசுத் தலைவரும், அவரின் அரசின் நீதி அரசமைப்பு, மறுசீரமைப்பு விவகார அமைச்சரும் எதிரும் புதிருமான நிலைப்பாடுகளை எடுத்து, ஒருவரை ஒருவர் மீறிச் செயல்பட முனைகின்றனர். அது அப்பட்டமாக வெளிப்பட்டு அம்பலமாகி நிற்கின்றது.

அரசமைப்பு மறுசீரமைப்புக்கு பொறுப்பான அமைச்சரை மீறி அரசமைப்பு திருத்தம் அரசுத் தலைவரினால் முன்னெடுக்கப்படுகின்றது.

சம்பந்தப்பட்ட அமைச்சரும் இந்த அரசியல் கேலிக்கூத்தையொட்டி பதவி விலகவில்லை. தன்னை மீறிச் செயற்பட முயலும் அமைச்சரை ஜனாதிபதியினாலும் பதவி விலக்க முடியவில்லை.

இதுதான் ரணில் அரசின் கேலிக் கூத்து நிலைமை. இக்கட்டான போக்கு.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் இறங்கப் போகின்றார் என்பது பகிரங்கமான ஒன்று. அவர் இன்னும் அதனை உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லையே தவிர, மற்றபடி அது வெளிப்படையான ஒன்றே.

அப்படி இருக்கையில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தாமும் குதிக்கப் போகின்றார் என்று அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பகிரங்கமாக அறிவித்து இரண்டு மாதங்கள் கடந்து விட்டன.

அது தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கும் 'தில்' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடையாது.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தன்னை நேரடியாக எதிர்த்து நிற்கும் விஜயதாஸ ராஜபக்ஷவைத் தனது அரசில் நீதி, சிறைத்துறை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக வைத்துக் கொண்டு அரசைக் கொண்டிழுக்க வேண்டிய கட்டாயம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

தன்னுடைய அரசமைப்புத் திருத்த முயற்சி தொடர்பில், தன்னுடைய அரசின் நீதி, அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரையே இணங்கப் பண்ண முடியாத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நாடாளுமன்ற உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவை - அதுவும் ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் சமயத்தில் தனது தற்போதைய ஆட்சி அதிகாரப்பிடி தளர்ந்து வரும் வேளையில் - எப்படிப் பெற முடியும் என்ற கேள்வியும் எழாமல் இல்லை.

எது, எப்படியாயினும் ஜனாதிபதித் தேர்தல் முடிந்து, வாக்குகள் எண்ணப்பட்டு, உத்தியோகபூர்வமாக முடிவுகள் அறிவிக்கப்படும் வரை ரணில் விக்கிரமசிங்கதான் ஜனாதிபதி. நாடாளுமன்றத்தை முன்கூட்டியே கலைக்கும் அதிகாரம் அந்த கணம் வரை அவருக்கு உள்ளது.

நாடாளுமன்றக் கலைப்பு என்ற பூச்சாண்டியை மிரட்டலாகக் காட்டி இந்த அரசமைப்பு திருத்தம் என்ற தமது தற்போதைய அபத்த முயற்சிக்கான ஆதரவை எம்.பிக்கள் மட்டத்திலிருந்து பெற அவர் எத்தனிப்பார். ஆனால் அது வெற்றியளிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அடியோடு இல்லை என்பதுதான் அரசியல் களநிலைமையாகும்.



# சமூகத்தினதும் நாட்டினதும் தலைவிதியை இளைஞர்கள் மாற்றும் காலம் வந்துவிட்டது!

## கிழக்கின் கேடயம் தலைவர் எஸ்.எம். சபீஸ் தெரிவிப்பு

(மாளிகைக்காடு செய்தியாளர்)

இது எங்களுடையதும் நமது மக்களுடையதுமான வாழ்க்கைப் போராட்டமாகும். தொடர்ச்சியாக மக்களை ஏமாற்றி வெற்றி பெறுவதற்கு எமது மக்கள் விளையாடும் கார்ட்ஸ் அல்ல. இதன்பின்னர் தலைநிமிர்ந்து நிற்கும் மக்களை உருவாக்க வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது.

கடந்த 30 வருடத்துக்குள் உலகம் எவ்வளவோ மாற்றம் பெற்றுவிட்டது. இருந்தும் நமது மக்கள் இன்னமும் அடிப்படை தேவைகளுக்காக அவதியுறுகின்றார்கள் என்றால் நம்மை வழிநடத்துபவர்கள் சரி இல்லை என்றுதானே அர்த்தம்.

இதனை நாம் சரி செய்யவேண்டும் என்று கிழக்கின் கேடயம் தலைவரும், அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினருமான எஸ்.எம் சபீஸ் தெரிவித்தார்.

மருதமுனை விக்டோரியஸ் விளையாட்டு கழகத்தின் புதிய மேலங்கி அறிமுக நிகழ்வும் விக்டோரியஸ் கலர்ஸ் நைட் விழாவும் விக்டோரியஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் மருதமுனை ஒசாக்கா ரேஸ்ட் இன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றன. அங்கு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,

ஒளிந்து நின்று பேசிய காலம் போதும். வெளிப்படையாக இளைஞர்கள் முன்வந்து எமது சமூகத்தினதும் நாட்டினதும் தலைவிதியை மாற்றும் காலம் வந்துவிட்டது. பாரிய மாற்றங்களோடு சுயதொழில்கள் மூலம் பிற்போக்கு சிந்தனைகளை உடைத்து முன்னோக்கி நகரும் காலத்துக்கு நாம் வர பிந்திவிட்டோம்.

இனியும் தாமதிக்க முடியாது. எல்லோரும் ஒன்றாக சேர்ந்து பயணிக்க வேண்டும்.– என்றார்.





# மன்னாருக்கு விஜயம் செய்தனர் சுகாதார உயர்மட்ட குழுவினர்!

(வாஸ் கூஞ்ஞ)

தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த சுகாதார உயர்மட்ட குழுவினர் யாழ். விஜயத்தை முடித்துக் கொண்டு கடந்த புதன்கிழமை (17) மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கும் விஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த குழுவினருடன் இராஜங்க அமைச்சரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் குழுவினர் மன்னார் பொது வைத்தியசாலையின் முக்கிய பகுதிகளைப் பார்வையிட்டதுடன் மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச். எம்.அஸாத் மற்றும் வைத்தியசாலையின் பிரிவிலுள்ள பொறுப்பு வாய்ந்த வைத்திய அதிகாரிகளிடம் நிறை குறைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.





அத்துடன் வைத்தியசாலையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினர் மற்றும் வைத்தியர் , தாதியர் ஆகியோரும் இந்த வைத்தியசாலையின் தேவைகளையும் தங்களுக்குள்ள பிரச்சினைகளையும் விரிவாக எடுத்துரைத்தனர்.

மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எச்.எம்.அஸாத் வைத்தியசாலையின் செயற்பாடுகள் மற்றும் தேவைகள் போன்றவற்றையும் புள்ளி விவரங்களுடன் அமைச்சருக்கும் அவருடன் வருகை தந்திருந்த குழுவினருக்கும் தெளிவுபடுத்தினர்.

# தாய்லாந்தில்ஆசிய ஆடவர் மல்யுத்தம்; போட்டியில் மட்டு. மாணவன் பங்கேற்பு!





(பழுவூரான்)

தாய்லாந்து நாட்டில் இடம்பெறவுள்ள ஆசிய ஆடவர் மல்யுத்த சம்பியன் சிப் போட்டியில் பங்கு பற்றவுள்ள மட்டக்களப்பு சிவானந்தா தேசிய பாடசாலை மாணவனுக்கு மாவட்ட அரச அதிபர் பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

தாய்லாந்து நாட்டில் இடம் பெறவுள்ள 20 வயதுக்கு உட்பட்ட ஆடவர் ஆசிய சம்பியன் சிப் மல்யுத்த போட்டியில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து மட்டக்களப்பு சிவானந்த தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் இறுதி ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் கிருஷ்ணகுமார் ஹறி பிரசாத் கலந்து கொள்ளவுள்ளார்.

அவருக்கு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன், மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த் , உதவி மாவட்ட செயலாளர் ஜி.பிரணவன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஜதிஸ்குமார் மற்றும் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் ஆகியோர் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.

ஆசிய மட்ட போட்டிகளுக்காக மல்யுத்த சம்மேளனம் நடத்திய மல்யுத்த தெரிவுப் போட்டியில் 57 கிலோகிராம் இடைப்பிரிவில் வெற்றி பெற்று தாய்லாந்து நாட்டில் இடம் பெறவுள்ள 20 வயதுக்கு உட்பட்ட ஆடவர் ஆசிய சம்பியன் சிப் மல்யுத்த போட்டிக்குத் தகுதி பெற்ற தமிழ் மாணவன் இவர் ஆவார்.

# முஷாரப் எம்.பியின் பன்முக நிதியிலிருந்து கழகங்கள், அமைப்புக்களுக்கு உதவிகள்!









(எம்.என்.எம்.அப்ராஸ்)

முன்னாள் இராஜாங்க அமைச்சரும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீனுக்கு வழங்கப்பட்ட விஷேட நிதி ஒதுக்கீட்டில் இருந்து, சாய்ந்த மருது பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பாடசாலைகள், சமூக சேவை அமைப்புக்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் போன்றவற்றுக்கு அவசர தேவைகளுக்கு வேண்டிய பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வுகள் சாய்ந்தமருது பிரதேச செயலக கேட்போர் கூடத்திலும் கலாச்சார மண்டபத்திலும் புதன்கிழமை (17) இடம்பெற்றன.

நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் முதுநபீனின் சாய்ந்த மருது மற்றும் மாவடிப்பள்ளி பிரதேச இணைப்பாளரான அஸாம் அப்துல் அஸீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பொருள்களை வழங்கி வைத்தார்.

நிகழ்வின் போது சாய்ந்தமருது பிரதேச செயலக பிரதி திட்டமிடல் உத்தியோகத்தர் கே.எல்.எம்.ஹமீட், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சி.முகம்மட் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினரின் ஆலோசகரும் மருதமுனை அந்நூர் பள்ளிவாசலின் தலைவருமான முக்கர்ரப் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த அஸ்ஸாம் அப்துல் அஸீஸ்,

பொருளாதார நெருக்கடியின் காரணமாக சிதைவடைந்து போய்க் கிடந்த நாட்டை சீர் செய்து, உதவிகளை செய்வதற்கு காரணமாய் இருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாங்கள் எல்லோரும் நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

ஜனாதிபதியிடம் இருந்து குறித்த நிதியை பெற்றுத்தந்த நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீனின் அயராத முயச்சி எங்களால் மறக்கமுடியாத ஒன்று.

சிதைவடைந்த நாட்டை ஜனாதிபதி சீர் செய்வதைப்போன்று நாடாளுமன்ற உறுப்பினர் முஷாரப், அபிவிருத்தியில் குன்றிப்போய் காணப்படும் நமது பிரதேசத்தை அபிவிருத்தியின்பால் கொண்டு செல்லும் விதம் பாராட்டக் கூடியது. நாடு வீழ்ச்சியில் இருந்து நிமிர்வதென்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவையும் நமது பிரதேசம் அபிவிருத்தியில் உச்சம் தொடுவதென்றால் முஷாரப்பையும் பலப்படுத்த வேண்டும்.– என்றார்.





# கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையை மீளமைப்பது தொடர்பில் கலந்துரையாடல்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் இறால் பண்ணையை மீளமைக்கும் திட்டம் தொடர்பான விசேட கலந்துரையாடல் கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (18) பழைய மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றது.

இதன்போது கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் கைவிடப்பட்ட நிலையில் காணப்படும் பண்ணைகளை மீள் அமைக்கும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் இடம் பெற்றது. இறால் வளர்ப்பு பண்ணையாளர்களுக்கு துரிதமாக பண்ணைக் காணிகளை வழங்கி பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் மாவட்ட மேலதிக அரச அதிபர் (காணி) நவருபரஞ்சினி முகுந்தன், பட்டிப்பளை பிரதேச செயலாளர் எஸ். சுதாகரன், தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் எஸ்.ரவிக்குமார், மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவரின் பிரத்தியோகச் செயலாளர் டி. தஜிவரன் மற்றும் கொக்கட்டிச்சோலை பிரதேச இறால் வளர்ப்பு பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.







# திருப்பழுகாமம் கண்ணகையம்மன் ஆலய சங்காபிஷேகத்தை முன்னிட்டு பாற்குடபவனி!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள புகழ்பூத்த கண்ணகையம்மன் ஆலயங்களுள் ஒன்றான திருப்பழுகாமம் கண்ணகையம்மன் ஆலய சங்காபிஷேகம் நேற்று வியாழக்கிழமை (18) இடம்பெற்றது.

சங்காபிஷேகத்தை முன்னிட்டு திருப்பழுகாமம் ஆத்துக்கட்டு பிள்ளையார் ஆலய முன்றலிலிருந்து ஆரம்பமான பாற்குடப்பவனி ஊர் வீதி வழியாக கண்ணகையம்மன் ஆலயத்தை வந்தடைந்தது.

அதனைத் தொடர்ந்து மேள வாத்தியங்கள் முழங்க, வேதபாராயணங்கள் முழங்க பரிபாலன தெய்வங்களான கண்ணகையம்மன் மற்றும் வைரவர் தெய்வங்களுக்கும் பக்த அடியார்கள் புடைசூழ, வேதபாராயணங்கள் முழங்க சங்காபிஷேகம் நிகழ்த்தப்பட்டது.

இந்தச் சங்காபிஷேகப் பெருவிழாவை பிரதிஷ்டா பிரதமகுரு சிவஸ்ரீ சு.கு.விநாயகமூர்த்திக் குருக்கள் தலைமையில் ஆலய நம்பியார் சிவஸ்ரீ க. சுந்தரம், சிவஸ்ரீ ந.கு.பத்மநிலோஜ ஈசான சிவம், வி.கு.சிஷ்யமேனன்சர்மா ஆகியோர் நிகழ்த்தி வைத்தனர்.

இந்தப் பெருவிழாவைக் காண மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபக்கமும் இருந்து பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் வருகை தந்திருந்தனர்.



# பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் பொருள்கள் வழங்கி வைப்பு





(சம்மாந்துறை நிருபர் தில்சாத் பர்வீஸ்)

திகாமடுல்ல மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை உரிய சமூக அமைப்புகளுக்கு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (18) சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கணக்காளர் எஸ்.எல் சர்த்தார் மிர்ஸா, அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ரிஸ்வான், எம்.என்.எம் சசீர் உட்பட சங்க உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# பட்டிருப்பில் கணித பூங்கா திறப்பு!





(வடிவேல் டினேஸ்)

பட்டிருப்பு கல்வி வலயம், போரதீவு கோட்டத்துக்கு உட்பட்ட திக்கோடை கணேஷா மகா வித்தியாலயத்தில் கணித பூங்கா திறப்பு விழாவும், அதனை மாணவர்களுக்கு கையளிக்கும் நிகழ்வும் பாடசாலை அதிபர் ஆ.நித்தியானந்தம் தலைமையில் புதன்கிழமை (17) நடைபெற்றன.

கல்வி அமைச்சின் “ஜெம்” திட்டத்தின் கீழ் 3 லட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கணித பூங்காவைப் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பட்டிருப்பு கல்வி வலயத்தின் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் பு.திவிதரன் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் சிறப்பு அதிதியாக பட்டிருப்பு கல்வி வலயத்தின் வணிகத் துறைக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.திருச்செல்வம், கௌரவ அதிதிகளாக போரதீவுப்பற்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் த.அருள்ராஜா, கணிதப் பாடத்துக்கான சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர் எஸ்.சேகர், சகோதர பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தக் கணித பூங்காவைத் தேசிய கலைஞரும், ஓவிய ஆசிரியருமான கலைஞர் ஏ.ஓ.அனல் மிகவும் சிறப்பாக முறையில் மாணவர்களின் கற்றலை இலகுபடுத்தும் நோக்கில், மாணவர்கள் விரும்பிக் கற்றக் கூடிவாறு கலைநயத்தோடு வடிவமைத்துள்ளார்.

# விவசாயத்தை நவீனப்படுத்தல் தொடர்பாக வாகரையில் நடந்த விசேட கலந்துரையாடல்!



(பழுவூரான்)

விவசாயத்தை தொழில்நுட்பத்தின் ஊடாக நவீனப்படுத்தல் மற்றும் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கு வட்டி இல்லாக் கடன் வழங்கும் திட்டம் தொடர்பாக விவசாயிகளுடனான கலந்துரையாடல் மட்டக்களப்பு பழைய மாவட்ட செயலக மகாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (18) இடம்பெற்றது.

இதன்போது வாகரைப் பிரதேச மக்கள் எதிர்நோக்கும் குடி தண்ணீர் பிரச்சினைகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் நிலக்கடலை விவசாயத்தை நவீனமயப்படுத்தி புதிய தொழில் நுட்பத்தை இந்தப் பிரதேச மக்களுக்கு வழங்கி வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை மற்றும் மேம்படுத்துவதற்கான செயல் திட்டங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜெஸ்டினா முரளிதரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கலந்துரையாடலில் திட்டமிடல் பணிப்பாளர் சதீஷ்குமார், மாவட்ட ஒருங்கிணைப்புத் தலைவரின் பிரத்தியோக செயலாளர் டி. தஜிவரன் மற்றும் மாவட்ட விவசாயத் திணைக்கள பணிப்பாளர் உட்பட வாகரைப் பிரதேச விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.




# காணி சீர்திருத்த ஆணைக்குழுவினரின் விசேட நடமாடும் சேவை மட்டக்களப்பில்!





(பழுவூரான்)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதித்த காணியற்ற மக்களுக்கு காணி வழங்கும் “உறுமய “ தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் சீர்திருத்த ஆணைக் குழுவின் காணியில் குடியிருக்கும் மக்களுக்கு உறுதி வழங்குவதற்கான நடமாடும் சேவை மட்டக்களப்பில் இடம்பெற்றது.

மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் என்.விமல்ராஜின் எற்பாட்டில் புதிய மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (19) இடம்பெற்றது.

வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்காக காணியற்ற மக்களுக்கு மிக விரைவாக சட்டபூர்வமான உரித்து வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் சிறிய தொகை பணத்தை செலுத்தி நிலம் ஒன்றை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக் கொள்வதற்கான கைவிரல் அடையாளம், உறுதியை பிரதி செய்தல், ஆவணம் பூர்த்தி செய்தல் போன்றன நடமாடும் சேவையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜெஸ்டினா முரளிதரன், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிப்பாளர் நிஹால், காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்திக்கான செயல்பட்டு மகிழ்வோம் சிறுவர் சந்தை மட்டுவில்!





(பழுவூரான்)

மட்டக்களப்பில் முன்பள்ளி சிறார்களின் ஆளுமை விருத்திக்கான “செயல்பட்டு மகிழ்வோம்” சிறுவர் சந்தை நேற்று முன்தினம் வியாழக்கிழமை (18) மட்டக்களப்பில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு கோட்டத்துக்கு உட்பட்ட அமிர்தகளி கருணை முன்பள்ளிச் சிறார்களின் “செயல்பட்டு மகிழ்வோம்” சிறுவர் சந்தை பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் வழிகாட்டலின் பெற்றோர்களின் பங்களிப்புடன் இடம்பெற்ற சிறுவர் சந்தை சிறார்களின ஆளுமை விருத்தியின் மகிழ்ச்சியான செயல்பாட்டை வெளிப்படுத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.





# முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு கிடைத்துள்ள சிறப்பு விருது!

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

வடக்கு மாகாண சுகாதாரத் துறையில் கடந்த 2023 ஆம் வருடத்துக்கான சுகவனிதையர் கிளினிக்கை மிக சிறப்பாக செய்து முடித்தமைக்கான மன்னார் மாவட்டத்தில் முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தெரிவு செய்யப்பட்டு விருது மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை முழுவதும் நடத்தப்பட்ட 'சுகவனிதையர்' கிளினிக் தெரிவில் வடமாகாணத்தில் முசலி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மாத்திரம் மிகவும் சிறப்பாக செய்து முடித்துள்ள நிலையில் தெரிவாகியுள்ளது.

அதற்கான சான்றிதமும் நினைவுச்சின்னமும் கடந்த 16 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கப்பட்டுள்ளது.

சுகவனிதையர் கிளினிக்கை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்கள், ஏனைய அலுவலர்களுக்கும் சிறப்பாக நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சியில் கந்தபுராண விழாவை அடுத்த மாதம் நடத்துவதற்கு ஏற்பாடு

வடமராட்சி மண்ணில் அடுத்த மாதம் நடுப் பகுதியில் புலோலி கந்த புராணக் கழகத்தால் கந்தபுராண விழா வெகுவிமர்சையாக நடத்தப்படவுள்ளது.

இந்த விழாவில் புராண படனத்துக்கு உபயம் செய்து புராணம் படிப்பவர்களுக்கு அன்னம் கொடுத்து மதிப்பளிக்கும் ஆலய நிர்வாகத்தினர், ஆலய குருமார்கள், அடியவர்கள், புராணபடலம் செய்யும் பௌராணிகர்கள், புராணத்துக்கு உரை எழுதியவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

விழாவில் "கந்த புராண கலா சாரம்", "புராணம் படிக்கும் ஆலயங்களும் பௌராணிகர்களும் வடமராட்சி மண்ணின் பதிவு" ஆகிய இரு நூல்களும் வெளியிடப்படவுள்ளன.

பௌராணிகர்கள் தங்கள் பற்றிய கட்டுரை ஒன்றையும் புகைப்படம் ஒன்றையும் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கட்டுரையில் பிறந்த ஆண்டு, குடும்ப விவரம், கல்வித் தகைமை, பணியாற்றிய விவரங்கள், படிக்கும் புராணம், ஆலயங்கள் பற்றிய விவரங்கள், படிக்கத் தொடங்கிய காலம், அனுபவம் படித்த புராணச் செய்யுள் ஒன்று நூல்கள் எழுதியிருந்தால் அவை பற்றிய விவரங்கள், புராணப் படிப்பின் ஆசிரியர் விவரங்கள் என்பவற்றை உள்ளடக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வதியும் பௌராணிகர்களும் விவரங்களை அனுப்பலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறந்த ஆண்டின் அடிப்படையில் தான் பௌராணிகள் விவரங்கள் நூலில் பதிவு செய்யப்படும்.

இது தொடர்பாக கலைநிகழ்ச்சிகளைச் செய்யும் கலைஞர்களும், கருத்துக்கள் ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்பும் அன்பர்களும் 077-4393118 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தபுராண விழா வடமராட்சி மண்ணில் அடுத்த மாதம் 17 ஆம் திகதி சனிக்கிழமை, 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, 19 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்களும் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

அத்துடன் கந்தபுராணத்தில் அதிகம் நெஞ்சைக் கொள்ளை கொள்வது பக்திக் கலையே? - இலக்கியக் கலையே? என்ற தலைப்பில் விழாவின் இறுதி நாளன்று பட்டிமன்றம் இடம்பெறும்.

கந்தபுராண விழா தொடர்பாக ஏனைய தகவல்களுக்கு பெரிய ஐங்கரன், புலோலி, 077-4393118 என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு!

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை காலை முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சைவகலை பண்பாட்டு பேரவை உறுப்பினரும், ஓய்வு பெற்ற அதிபருமான சிவநாதன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் “தமிழே முருகன்” எனும் தலைப்பில் ஆண்மீக சொற்பொழிவை தொல்பொருள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் கயிலை நாதன் கயிலைவாசன் நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை உறுப்பினர்கள், நிர்வாகிகள், சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை









(எஸ்.நிதர்ஷன்)

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் பே.தனபாலசிங்கம் தலைமையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இந்தச் சந்தை இடம்பெற்றது.

இந்தச் சந்தையின் ஆரம்ப நிகழ்வில் யாழ். வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.கணேசலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்தார்.

இதன் போது விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்த முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் உள்ளிட்டவர்கள் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.

இதனைத் தெடர்ந்து பாடசாலை அதிபரின் மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இதன் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டிருந்த இ.கணேசலிங்கம் சிறுவர் சந்தையை நாடாவெட்டித் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் பல மாணவர்களாலும் பல்வேறு விதமான பொருள்கள் சந்தையில் காட்சிப்படுத்தியிருந்தன. இதனைப் பார்வையிட்ட விருந்தினர்கள் மாணவர்களிடம் பல்வேறு பொருள்களையும் வாங்கினர்.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கறுப்பு ஜூலையில் தமிழர் துயரமும் ஈழப்போர் இலக்கிய உருவாக்கமும்

- நவீனன் -

போரின் கொடுமைகளும், தமிழரின் நீண்டகால துயரமும் அவலமும் துயரங்களும் அகத னுள்ளே வலிகள் நெருப்பாக இன்னும் நீண்டு கொள்கிறது. 1956 இல் தொடங்கிய தமிழர் இனவழிப்பு மே 2009 இல் முள்ளிவாய்க்கால் இனவழிப்பின் உச்சமாக நடைபெற்று, இன்னமும் தமிழர் மீதான அடக்குமுறைகள் தொடரும் நிலையில் இழந்து போன ஓர் தேசத்தின் கனவுச் சிதறல்களாக பதிந்து நிற்கும் கவிதைகளும், ஆக்கங்களுமே ஈழப் போர் இலக்கியத்தில் முதன்மையாகிறது.

கறுப்பு ஜுலை நிகழ்வுகளே இலங்கை இனப் பிரச்சினை ஆயுதப் போராட்டமாக மாறக் காரணமானதாகப் பார்க்கப்படுகின்றது.


இந்த நிகழ்வின் ஒருங்கிணைப்பு முறை ஒரு திட்டமிட்ட கட்டமைக்கப்பட்ட இனப்படுகொலை செயற்பாடாகவே நம்பப்படுகிறது.

பாறாங் கல்லெனவே தமிழர் நெஞ்சில் ஆறாமற் கிடக்கும் நினைவுகள் தற்போது எழுத்துருப் பெற்று வருகின்றன. அதனுள் கறுப்பு ஜுலை – ஆடிக் கலவரம் 1983 திட்டமிட்ட முறையில் சிங்கள இனவாதிகள் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்தியும், சொத்துகளை அழித்தும் கைப்பற்றியும், 3000 பேர்வரை படுகொலை செய்ததுமான ஒரு துன்பியல் நிகழ்வின் பதிவுகளே ஈழப்போர் இலக்கிய பிறப்பாக உருவகங் கொள்கின்றன.

1984 கறுப்பு ஜுலை “இனக் கலவரம்” என்ற போர்வைக்குள் நடைபெற்றது தமிழர் மீதான “இனப்படுகொலை” நிகழ்வாகும். உண்மையில் இந்தக் கோர கறுப்பு ஜுலை நிகழ்வுகளே ஈழத்து தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தி போராடத் தூண்டியது என்று கூறலாம்.

மூன்று தசாப்த காலமாக நடைபெற்ற தமிழ் மக்களின் அகிம்சை போராட்டம் தோற்றுப் போக தமிழ் இளைஞர்கள் மத்தியில் புரட்சிகர ஆயுதப் போராட்டமாக மாறுவதற்கு தேவையான வலிமையை கறுப்பு ஜுலை வலிகளில் இருந்தே ஈழத்து தமிழ் மக்கள் பெற்றார்கள். இதன் மூலம் எழுந்த இந்தப் போராட்ட இலக்கியங்கள் வாழ்விடத்தை தொலைத்த அவலத்தையும், மக்கள் படும் துயரத்தையும் முன்னிறுத்தி இந்தப் படைப்புகள் உருவாகி வெளிவந்தன.

1958 ஆம் ஆண்டு தென்னிலங்கையில் நடந்த இனக்கலவரத்தின் பின்னணியை சித்திரிக்கும் நாவலாக மு.தளையசிங்கம் எழுதிய “ஒரு தனி வீடு” இலங்கையில் வெளிவந்தது. அவரது முதல் நாவலான ஒரு தனி வீடு 1962 இல் எழுதப்பட்டு 1984 இல் அவர் இறந்து 22 வருடங்களுக்குப் பிறகு தான் வெளிவந்தது. ஈழத் தமிழருக்கு தனிநாடுதான் அர்த்தமுள்ள தீர்வாக அமையும் என்ற செய்தியைக் கூறும் படைப்பாகவும்,இனஐக்கியம்,தேசியஒருமைப்பாடு முதலான மார்க்சீய – கம்யூனிஸ சுலோகங்களை விமர்சிக்கும் நாவலாகவும் ஒரு தனி வீடு அமைந்தது.




### கவிஞர்களின் மரணத்துள் வாழ்வோம்

1985இல் ‘மரணத்துள் வாழ்வோம்’ என்ற பெயரில் உ.சேரன், அ.யேசுராசா, இ.பத்மநாப ஐயர், மயிலங்கூடலூர் பி.நடராஜன் ஆகிய நால்வரும் தொகுத்து ஒரு போரியல் கவிதைத் தொகுதியை வெளியிட்டிருந்தார்கள். முதலில் யாழ்ப்பாணம் தமிழியல் வெளியீடாகவும், பின்னர் கோவை விடியல் பதிப்பகத்தின் வாயிலாக உப்பிலி பாளையத்திலிருந்து 2 ஆவது பதிப்பாக டிசெம்பர் 1996 இலும் இந்த நூல் 170 பக்கங்களில் வெளிவந்திருந்தது. ஈழத்தின் 31 இளம் கவிஞர்களின் 82 கவிதைகளின் தொகுப்பு இதுவாகும்.

ஈழத்து இனப் பிரச்சினையைப் பகைப் புலமாகக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பில் மூன்று பெண் கவிஞர்களின் பெண் நிலைப்பட்ட அனுபவங்கள் உயிர்த்துடிப்புடன் வந்துள்ளமையும் சிறப்பம்சமாகும்.

ஈழத்தின் போர்க்கால கவிதைத் ணதுறையில் நினைவு கொள்ளத்தக்க மற்றொரு கவிஞர் மறைந்த கி.பி.அரவிந்தன் ஆவார். பிரான்ஸ் தேசத்தில் புலம்பெயர்ந்து, வாழ்ந்து காலமான இவர் ஈழப் போராட்டத்தில் விடுதலைப் போராளியாக இருந்தவர்.

இவரது படைப்புக்களில் ஈழ விடுதலைப் போராட்டமும், ஈழத் தமிழரின் புகலிட வாழ்வியலும் முனைப்புடன் காணப்படுகின்றன. மூன்று படைப்புக்களை தமிழகத்தில் இருந்து வெளியீடு செய்தவர் இவர். ‘இனி ஒரு வைகறை’ அவர் எழுதிய முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

1992 இல் வெளியான ‘முகம் கொள்’ கி.பி.அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பு ஆகும். ‘கனவின் மீதி’ இவரது மூன்றாவது கவிதைத் தொகுதியாகும். கி.பி.அரவிந்தனின் கவிதைகள் வரலாற்று அனுபவங்களில் தோய்ந்து எழுந்தவை மட்டுமல்ல, அவ் அனுபவங்கள் அலாதியான ஒரு கற்பனைத் திறத்தால் பளிங்கு போன்றதொரு தெளிவான மொழியால் சீரமைக்கப்பட்டு பண்படுத்தப்பட்டு கவிதைகளாக வார்த்தெடுக்கப் பட்டுள்ளன எனக்கூறலாம்.

### செங்கை ஆழியானின் ஈழப் போர் இலக்கியம்

ஈழத்து போர்க்கால நாவல் இலக்கிய வரலாற்றில் படைப்பாளுமை மிக்கவர் செங்கை ஆழியான் ஆவார். மிகப்பெருமளவு நூல்களை வெளியிட்ட ஈழத்து எழுத்தாளர் எனும் பெருமைக்கு உரிய செங்கை ஆழியானின்புதினங்கள்,சிறுகதைகள், புவியியல் நூல்கள், வரலாற்று ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் மற்றும் பதிப்புத்துறை எனப் பல துறைகளிலும் என அவரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும்.

1977 இனக்கலவர ஆவணம்


தொடர்ச்சி▼

# கறுப்பு ஜூலையில் தமிழர் துயரமும்
# ஈழப்போர் இலக்கிய உருவாக்கமும்

தொடர்ச்சி▲

1977 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாத இனக்கலவரத்தின் போது யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச வன்முறைகள் பற்றி செங்கை ஆழியான் எழுதிய "24 மணி நேரம்" என்கிற நூல் முக்கியமான வரலாற்று ஆவணமாகும். ஈழத்து போர்க்கால வரலாற்றைச் சிறுகதை, நாவல் இலக்கியமாக எதிர்கால சந்ததிக்கு வெளிப்படுத்திய படைப்பாளுமை மிக்க செங்கை ஆழியானின் பணி ஈழ வரலாற்றில் என்றும் போற்றப்படும்.

செங்கை ஆழியானின் இலக்கியச் செயற்பாடுகளில் அவரது ஆவணப்படுத்தல் முயற்சி மிக முக்கியமானது ஆகும். மட்டக்களப்பில் ஏற்பட்ட சூறாவளியைப் பற்றி




அவர் எழுதிய "12 மணி நேரம்" என்கிற நூல் இயற்கை இடரின் துயரத்தை வரலாற்று வரிகளாக்கிய நூலாகும். இந்த இரண்டு நூல்களையும் நீல வண்ணன் என்ற புனைபெயரில் எழுதியுள்ளார்.

### ‘தீம்தரிகிடதித்தோம்’ நாவல்

ஈழப்போராட்டத்தின் மூலவேர் எது என்பதை அரசியல் பின்னணியோடு தொட்டுக் காட்டுகிறது ‘தீம்தரிகிடதித்தோம்’ எனும் நாவல்.

இந்த நாவல், இலங்கை அரசு 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவந்த போது மலர்ந்த கற்பனை காதல் கதையை சொல்கிறது.

சிங்களம் ஆட்சி மொழியாக்கப்பட்ட போது தந்தை செல்வா, ஜி.ஜி. பொன்னம்பலம், சி. சுந்தரலிங்கம் போன்ற முதுபெரும் தலைவர்கள் சாத்விக முறையில் கிளர்ச்சி நடத்தி, தமிழ் மக்களின் எதிர்ப்பைத் தெரிவித்ததை வெளிப்படுத்தும் இந்த நாவலும் ஓர் வரலாற்று நூலாக எழுகிறது.


இந்த நாவலில் புதுமை என்னவென்றால் தனிச் சிங்கள மொழிச் சட்ட விவாதம் நடந்த போது எடுக்கப்பட்ட குறிப்புகளும், விவாதமும் காட்டப்பட்டிருக்கும் களம் ஒரு பக்கம் போய்க் கொண்டிருக்க, இன்னொரு பக்கம் தமிழ் இளைஞனுக்கும் சிங்களப் பெண்ணுக்குமான காதல் களம் காட்டப்பட்டிருக்கும். நாவல் முடியும் போது இனக்கலவரம் ஆரம்பிக்க அவர்களின் காதலும் இனவெறியில் எரிந்து போகும்.

அத்தோடு அறவழியில் நடந்த போராட்டத்தை ‘சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான போர்’ என்று திசை திருப்பு, அன்றைய இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா, பொலிஸாரின் துணையோடு சிங்கள சமூக விரோதிகளை ஏவிவிட்டு, போராடிய ஈழத்தமிழர்களை அடித்து நொறுக்கினார். பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் வாழக்கூடிய தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்களை வலுக்கட்டாயமாக குடி அமர்த்தினார். பொருளாதார, சமூக நெருக்கடிகளை ஏற்படுத்தினார். தமிழ் மக்களின் அனைத்து எதிர்ப்புகளை மீறி சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்கினார்.

தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி இரண்டாந்தர குடிமக்களாக்கும் பிரிவினை உணர்வை ஏற்படுத்தினார். சிங்கள ஆட்சியின் கொடுமையை இனியும் சகிக்க முடியாது என்ற சூழ்நிலையில் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட நிர்ப்பந்திக்கப் பட்டனர் என்பதையும் இந்த நாவல் சித்தரிக்கிறது.

### திட்டமிட்ட இனப் படுகொலைகள்

சிங்கள அரசுகளால் 1977, 1983 ஆண்டுகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவர வன்முறைகளும் தமிழ் மக்களுக்கான சுயநிர்ணய உரிமைக்



கான அவசியத்தையும் தனி நாடு ஒன்றுக்கான தேவையையும் வலியுறுத்தின. இந்தக் காலகட்ட போராட்ட வாழ்வே ஈழ இலக்கியப் படைப்புகளில் ஏற்பட்ட மாற்றம் என்றும் கருத இடமுண்டு.

1981 இல் யாழ்ப்பாண



மண்ணில் யாழ்ப்பாணப் பொது நூலகம், ஈழநாடு பத்திரிகை அலுவலகம், பூபாலசிங்கம் புத்தக சாலை ஆகிய தமிழரின் அறிவியல், ஊடகவியல் நிறுவனங்கள் சிங்கள அரசின் கூலிப்படைகளால் பகிரங்கமாகத் தீயிட்டுக் கொழுத்தப்பட்ட சம்பவமானது, அதுவரை காலமும் கொரில்லாப் போராட்ட முறைகளை இளைஞர்கள் மட்டுமே பங்கேற்றி வந்த சூழல் மாறி, அறிவுசார் புத்திஜீவிகளையும் விடுதலைப் போராட்டத்தின்பால் ஈர்த்தது.

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான அனைத்து இலக்கியப் படைப்புகளும் போராட்டம் சார்ந்தவையல்ல. போராட்டத்தின் வலிகள், உடன்பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப்பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

### புதுவை இரத்தினதுரை கவியுகம்

கவிஞர் புதுவை இரத்தினதுரை ‘வியாசன்’ என்ற புனைபெயரில் எழுதிய கவிதைகளின் தொகுப்பு "வியாசனின் உலைக்களம்" எனும் நூலாகும். போரியலையும் அது சார்ந்திருக்கும் அரசியலின் ஆழப்பாடுகளையும் சுழியோடி, நுகர்ந்து, மென்று விழுங்கி, அதைஅக்குவேறுஆணிவேறாகத் தனது பேனாமுனையால் உலைக்களத்தின் மூலம் வெளிக்கொண்டு வந்துள்ளார்.

‘பூவரசம் வேலியும் புலுனிக் குஞ்சுகளும்’ என்ற புதுவை இரத்தினதுரையின் கவிதைத் தொகுப்பு யாழ்ப்பாணம் நங்கூரம் வெளியீடாக, பங்குனி 2005 இல் வெளியானது. இந்தத் தொகுப்பில், வெளிச்சம் இதழில் கார்த்திகை 1993 இல் வெளிவந்த

தொடர்ச்சி▼

# கறுப்பு ஜுலையில் தமிழர் துயரமும் ஈழப்போர் இலக்கிய உருவாக்கமும்

தொடர்ச்சி▲

'தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே' என்ற கவிதையில் தொடங்கி, வெளிச்சம் சஞ்சிகையின் மாசி 2005இல் வெளியான 'இருந்ததும் இல்லையென்றானதும்' என்ற கவிதைவரை 12 ஆண்டுகளில் கவிஞர் புதுவை இயற்றிய மொத்தம் 155 கவிதைகள் இடம் பிடித்திருக்கின்றன.

**1981 யாழ். நூலகம் எரிப்பு**

ஈழ ஈழவிடுதலைப் போராட்டத்துக்கு முன்னோடியாக பல நூல்கள் ஆரம்பகாலத்தில் வெளிவந்திருந்தன. பண்டிதர் க.பொ.இரத்தினம், கவிஞர் காசி ஆனந்தன் போன்றேரின் விடுதலை உணர்ச்சிமிக்க படைப்புகளைசுதந்திரன்,தீப்பொறிபோன்ற அரசியல் ஏடுகள் எழுபதுகளில் தாங்கி வந்தன.

இலங்கை அரசின் பாரிய வன்முறை கெடுபிடிகளுக்கு மத்தியில் ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய பிரசுரங்களை தாயக மண்ணில் வெளிப்படையாக அச்சிட முடியாத நிலை அக்காலத்தில் காணப்பட்டது.

அத்துடன் ஆரம்பகால விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பல்வேறு போராட்ட அமைப்புக்களும் தமது தளங்களை தமிழகத்திலும் கொண்டியங்கியதால் அக்காலகட்ட வெளியீடுகள் அதிகளவில் தமிழகத்தில் அச்சிடப்பெற்று, தாயகத்துக்குக் கொண்டுவரப்பட்டு விநியோகிக்கப்பட்டன.




அதேவேளை, இன விடுதலைப் போராட்டத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்த துணிச்சலுடன் முன்வந்த பல ஈழத்துப் படைப்பாளிகளும் அந்த நாள்களில் புனைபெயரினுள் மறைந்திருந்தே இத்தகைய இலக்கியங்களைப் படைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது என்பதும் உண்மையே.

**ஈழத்தின் போரியல் வரலாறு**

ஈழத்தின் போரியல் வரலாற்றுக் காலகட்டத்தில் வெளியான



அனைத்து இலக்கியப் படைப்புக்களும் போராட்டம் சார்ந்தவை யல்ல. போராட்டத்தின் வலிகள், உடன் பிறப்புக்களின் இழப்புக்கள், கொடூர வன்மங்கள், உடமைகளின் அழிப்புக்கள், இடப் பெயர்வின் அவலங்கள், புலம்பெயர்ந்து சென்ற உறவுகளின் பிரிவுத் துயர், போராளிகளின் வீரதீரங்கள், மானிடத்தையும் பெண்மையையும் இழிவுபடுத்தும் சித்திரவதை என்று ஒரு போராட்ட வாழ்வின் பல்வேறு பக்கங்களையும் போரியல் இலக்கியங்கள் தொட்டுச் செல்கின்றன.

சர்வதேசவரலாற்றில்ஈழத்தமிழரின் தனித்துவமான இலக்கியமாக உலகளாவிய தமிழ் இலக்கியப் படைப்புக்களில், நின்று நிலைத் திருக்கப்போகும் வலிமைபெற்ற போரியல் இலக்கியத்தின் நீட்சி இன்னமும் தொடர்கிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு பிறகு, இலங்கை சுதந்திரத் தின் பின்னர், சின்னஞ்சிறு மாங்காய்த் தீவில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்தக் கால கட்டத்தின் தமிழர்களின் அடையாள அரசியல் என்பது இலக்கியம், கவிதைகளின் மூலம் தெறித்து வந்தது. மேலும் முற்போக்கு சார்ந்த இலக்கியங்கள் ஏராளமாக வரத்தொடங்கின. இந்த இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை உள்ளடக்கியும் இருந்தன. இந்தக் காலகட்டத்தில் வந்த இலக்கிய படைப்புகள் இலங்கைத் தமிழ்ச் சூழலில் பெரிய வெளிச்சத்தை மக்களுக்கு ஏற்படுத்தின.

குறிப்பாக 1958 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ் இலக்கிய போக்குகளில் பல மாற்றம் அடைந்திருக்கின்றன. தமிழரின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றம் சென்ற தமிழ் அரசியல்வாதிகள் சாத்விகப் போராட்டங்களின் வழியாக அடக்குமுறைகளுக்குத் தீர்வு காண முயன்று தோல்வி கண்டமை இன்று வரலாறாகி விட்டது. இலங்கையில் தமிழரின் விடுதலைப்போராட்டம்சாத்வீகப்போராட்ட நிலையில் இருந்து ஆயுதப் போராட்ட முறைக்குப் பரிணாம வளர்ச்சி பெற்ற எழுபதுகளின் இறுதிப் பகுதிகளிலேயே போரியல் சார்ந்த நூல்கள் ஆங்காங்கே வெளிவர ஆரம்பித்து விட்டன.

**செம்மணி கோரம்**

'செம்மணி' என்ற தலைப்பில் வெளியான நூலில் 24 கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றிருந்தன. வெளிச்சம் வெளியீடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பண்பாட்டுக் கழகத்தின் நடுவப் பணியகம், செப்ரெம்பர் 1998இல் இந்தத் தொகுப்பை வெளியிட்டது. யாழ்ப்பாணத்தில் இராணுவ முற்றுகையின் போது கடத்திச் செல்லப்பட்டு காணாமல் போனோராக்கப்பட்டு, வதையின் பின் புதைக்கப்பட்ட எம் உறவுகளுக்கான கவிதைகள் இவை.

1995இல் ரிவிரச என்ற யாழ்ப்பாண ஆக்கிரமிப்புப் போரின் பின்,தென்மராட்சியிலும்வடமராட்சியிலும் தஞ்சமடைந்த தமிழ் மக்களை மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கை மூலம் சிறைப்படுத்திச் சொந்த இடங்களுக்கு அழைத்துச் சென்றது. அந்தக் காலகட்டத்தில் சிங்கள இராணுவம் அவர்களை யாரும் காணாமல் பிடித்துச் சென்று படுகொலை செய்து செம்மணியில் புதைத்த வஞ்சகச் செயலை அம்பலப்படுத்தும் பதிவுகளாக இவை அமைகின்றன. செம்மணிப் புதைகுழிகள் எம்மக்களிடையே ஏற்படுத்திய கொதிப்புணர்வின் அடையாளமாகவே இக்கவிதைகள் அமைகின்றன.

சிறுகதை, நாவல் இலக்கியத் துறையில் போரியல் பதிவுகள் ஏராளமாக ஈழத்தமிழர்களால் மேற்கொள்ளப்படுகின்றன. 1980களிலிருந்து ஈழத்தில் வெளியாகும் சிறுகதைகளில் இதன் பாதிப்பு பெரிதளவில் இருப்பதை அவதானிக்கலாம். குறிப்பாக வன்னி மண்ணிலிருந்து வெளியாகும் படைப்பிலக்கியங்கள் அனைத்திலும் இதன் பாதிப்பு துலக்கமாகத் தெரிகின்றது.

இலங்கை அரசுகள் கொண்டு வரும் கொடூர சட்டங்கள் மூலம் தமிழ் மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது இலக்கியத்தில் மாற்றங்கள் ஏற்பட்டது. 1980 ஆம் ஆண்டுக்கு பிறகு போர் சூழல் குறித்த இலக்கியங்கள் ஏராளமாக வந்தன. போர் அவலம் என்பது 30 ஆண்டு காலமாக தவிர்க்க முடியாததாக இருந்தது. இந்த கால கட்டத்தில் ஏராளமான ஆண், பெண் படைப்பாளர்கள் உருவாகிப் போர் சூழல், தமிழ் மக்களின் துயரம் குறித்த படைப்புகளை உருவாக்கினர். போரில் ஈடுபட்டவர்களும், போரை வெளியில் நின்று பார்த்தவர்களும் ஏராளமான புதிய படைப்புகளை உருவாக்கினர். போருக்குப் பிறகு இப்போது ஏராளமான புலம் பெயர் இலக்கியங்கள் உருவாகின.

# நெடுந்தீவில் கடற்கரைப் பகுதிகளை துப்புரவு செய்த ஊரும் உறவும் அமைப்பு




(எஸ்.நிதர்ஷன்)

நெடுந்தீவு ஊரும் உறவும் அமைப்பால் நெடுந்தீவு கடற்கரை பகுதிகள் சுத்தமாக்கப்பட்டன. மேற்படி அமைப்பின் ஏற்பாட்டில் நெடுந்தீவு 06 வட்டாரம் தொடக்கம் 10 வட்டாரம் வரையான கடற்கரை பகுதிகள் சுத்தம் செய்யும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன் போது கடற்கரை பகுதிகளில் காணப்பட்ட பிளாஸ்ரிக் உள்ளிட்ட ஏனைய கழிவுப் பொருள்களும் சிரமதானம் மூலம் கடற்கரை பகுதிகளில் இருந்து அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நெடுந்தீவு மண்ணில் “நெடுவூர் திருவிழா” நடைபெறவுள்ள நிலையில் துப்பரவாக்கும் செயற்பாடுகள் நேற்று (19) முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் செயற்பாட்டில் நெடுந்தீவு ஊரும் உறவு அமைப்பின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# வீடமைப்பு கடனுக்கான காசோலைகள் வழங்கல்









(அஸ்ஹர் இப்றாஹிம்)

முல்லைத்தீவு மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் “சமட் நிவாகன” வீடமைப்பு கடன் திட்டத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட 20 பயனாளிகளுக்கு காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 10.8 மில்லியன் ரூபாவுக்கு உரிய முதற்கட்ட காசோலைகள் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானால் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையில் வைத்து வழங்கப்பட்டன.



# மின் கட்டண உயர்வுக்கு எதிராக போராடியவர்கள் மீது வழக்குப்பதிவு

## அன்புமணி ராமதாஸ் கண்டனம்

“கடந்த 3 ஆண்டு கால தி.மு.க. ஆட்சியில் ஏறக்குறைய 5 ஆயிரம் படுகொலைகள் நிகழ்ந்திருக்கும் நிலையில் அவற்றைத் தடுக்க தமிழக அரசாலும், காவல்துறையாலும் முடியவில்லை. மாறாக, மக்களை பாதிக்கும் மின் கட்டண உயர்வைக் கண்டித்து போராட்டம் நடத்தினால் அதை தாங்கிக் கொள்ள முடியாமல் வழக்குப் பதிவு செய்கிறது, தி.மு.க. அரசு,”

– இவ்வாறு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் விமர்சித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

“தமிழகத்தில் பொதுமக்களையும், தொழில் துறையினரையும் கடுமையாக பாதிக்கும் வகையில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள மின்சாரக் கட்டண உயர்வைக் கண்டித்து சென்னை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் போராட்டம் நடத்தினோம் என்று என் மீதும், நூற்றுக்கும் மேற்பட்ட பா.ம.கவினர் மீதும் சென்னை மாநகரக் காவல்துறை வழக்குப் பதிவு செய்திருக்கிறது. தி,மு,க, அரசின் தூண்டுதலில் சென்னைக் காவல் துறை கட்டவிழ்த்து விட்டுள்ள இந்த அடக்குமுறையும், பொய்வழக்கு பதிவும் கடுமையாக கண்டிக்கத்தக்கவை.

தமிழகத்தில் மின்கட்டண உயர்வு கடந்த 15 திகதி அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கு அடுத்த நாளே அதைக் கண்டித்து போராட்டம் நடத்தப்படும் என்று பா.ம.க. அறிவித்தது. அந்தப் போராட்டத்தை வள்ளுவர் கோட்டத்தில் நடத்த அனுமதி கோரி, பா.ம.கவின் மத்திய சென்னை வடக்கு மாவட்ட முன்னாள் செயலாளர் பி.கே.சேகர் சென்னை மாநகர காவல்துறையின் நுண்ணறிவுப் பிரிவு உதவி ஆணையர் சங்கரலிங்கம் என்பவரிடம் மனு அளித்தார். அதை ஆய்வு செய்த காவல்துறை வள்ளுவர் கோட்டம் அருகில் போராட்டம் நடத்த அனுமதி இல்லை என்று கூறி, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் போராட்டம் நடத்திக் கொள்ள வாய்மொழியாக அனுமதி அளித்தது. அதன்படி தான் அங்கு போராட்டம் நடத்தப்பட்டது.

எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் போராட்டம் நடத்துவதற்காக காலை முதலே தொண்டர்கள் கூடிய நிலையில், அவர்களை காவல்துறையினர் தடுக்கவில்லை. போராட்டத்தில் பங்கேற்க வந்த என்னிடமோ, ஏனைய தலைவர்களிடமோ போராட்டத்துக்கு அனுமதி இல்லை என்று கூறவில்லை. மாறாக, போராட்டத்துக்கு பாதுகாப்பு அளித்தனர். இத்தகைய சூழலில் போராட்டம் முடிவடைந்த பிறகு அனுமதியின்றி போராடியதாக வழக்குப் பதிவு செய்திருப்பது மிகவும் நகைச்சுவையாக இருக்கிறது.

மின் கட்டண உயர்வைக் கண்டித்து நடத்தப்பட்ட போராட்டத்தின் போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நடைபெறும் ஊழல்கள் குறித்து ஆதாரங்களுடன் நான் பேசினேன். தமிழகத்தில் அறிவிக்கப்பட்டு, இன்னும் செயல்படுத்தப் படாத மின் திட்டங்கள் குறித்து ஆதாரங்களுடன் விளக்கினேன். அவை மக்கள் மத்தியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. அதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தான் பா.ம.கவினர் மீது பொய்வழக்குப் பதிவு செய்ய தி.மு.க. அரசு தூண்டியுள்ளது. சென்னை மாநகரக் காவல்துறையும் அதை அப்படியே செயல்படுத்தியுள்ளது.

தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சந்தி சிரிக்கிறது. 2021-22ஆம் ஆண்டில் 1558 படுகொலைகள், 2022-23ஆம் ஆண்டில் 1,596 படுகொலைகள் மற்றும் 18 கூலிப்படை கொலைகள் நடந்துள்ளன. இவற்றை தமிழக சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார். 2023-24 ஆம் ஆண்டில் 1600-க்கும் மேற்பட்ட கொலைகள் நடந்துள்ளன என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இப்படியாக கடந்த 3 ஆண்டு கால திமுக ஆட்சியில் ஏறக்குறைய 5 ஆயிரம் படுகொலைகள் நிகழ்ந்திருக்கும் நிலையில் அவற்றைத் தடுக்க தமிழக அரசாலும், காவல்துறையாலும் முடியவில்லை. கள்ளக்குறிச்சியில் நடந்தது போன்ற கள்ளச்சாராய சாவுகளை தடுக்க முடியவில்லை. கஞ்சா விற்பனையை கட்டுப்படுத்த முடியவில்லை. சந்துக் கடைகள் எனப்படும் சட்ட விரோத மதுக்கடைகள் மீது நடவடிக்கை எடுக்க முடியவில்லை. மாறாக, மக்களை பாதிக்கும் மின்கட்டண உயர்வைக் கண்டித்து போராட்டம் நடத்தினால் அதை தாங்கிக் கொள்ள முடியாமல் வழக்குப் பதிவு செய்கிறது தி.மு.க. அரசு.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

# தமிழகம் மற்றும் கர்நாடக அரசைக் கண்டித்து தே.மு.தி.க மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

தமிழகம் மற்றும் கர்நாடக அரசைக் கண்டித்து தே.மு.தி.க எதிர்வரும் 25 ஆம் திகதி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தே.மு.தி.க பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மின் கட்டண உயர்வைக் கண்டித்தும், மின் கட்டண உயர்வை திரும்பப் பெறுமாறு வலியுறுத்தியும், காவிரி நீரைத் திறக்க மறுக்கும் கர்நாடக அரசின் செயற்பாடைக் கண்டித்தும் இந்த போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த நிலையில் இப்போராட்டத்தில் அனைத்து மாவட்ட கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மகளிர் அணியினர், விவசாயிகள் ,பொதுமக்கள் என அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பிரேமலதா விஜயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.



# பங்களாதேஷில் வன்முறை அதிகரிப்பு; நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு!

பங்களாதேஷ் முழுவதும் இடம்பெற்று வரும் வன்முறை சம்பவங்களை தடுக்கும் வகையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டாக்காவில் சுமார் 15 நாள்களாக நடைபெற்று வரும் மாணவர் போராட்டத்தை ஒடுக்க அரசு எடுத்த கடுமையான நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றது.

இதன்போது இடம்பெறும் வன்முறை சம்பவங்களால் 50 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். ஆயிரத்திற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டின் நிலைமையை கருத்தில் கொண்டு நாட்டில் உள்ள பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை மூடுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கலவரத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசாங்க தொலைக்காட்சிக்கு தீ வைத்ததாகவும், நாட்டில் உள்ள அனைத்து தொலைக்காட்சி செய்தி சேவைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் இணைய இணைப்புகள் மற்றும் தொலைபேசி இணைப்புகள் முடக்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டு சுதந்திரப் போரில் உயிர்நீத்தவர்களை போர்வீரர்களாக கருதி அரசு வேலைகளில் அவர்களின் குடும்பத்தாருக்கு முன்னுரிமை அளிக்கும் கோட்டா முறைக்கு எதிராக மாணவர்கள்போராட்டம்நடத்திவருகின்றனர்.

2018 ஆம் ஆண்டில், பங்களாதேஷின் உயர் நீதிமன்றம் இந்த ஒதுக்கீட்டு முறை சட்டவிரோதமானது என்று தீர்ப்பளித்திருந்த போதும், மேல் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அதை புதுப்பிக்க அரசாங்கம் முயற்சி எடுத்ததை தொடர்ந்து இந்த மாணவர் போராட்டம் வெடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.













# மைக்ரோ சொப்ட் முடக்கம்: சைபர் தாக்குதல் இல்லை!

உலகளவில் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் மென்பொருளில் ஏற்பட்ட பாதிப்பு சைபர் தாக்குதல் இல்லை என விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மென்பொருளில் ஏற்பட்ட பாதிப்பு காரணமாக உலக அளவில் வங்கி சேவைகள் மற்றும் விமானங்களை தரையிறங்குவது விமானங்களின் செக்-இன் சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இலங்கை, இந்தியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, உள்ளிட்ட பெரும்பாலான நாட்டில் வசித்து வருபவர்கள் இந்த பிரச்சனையை எதிர்கொண்டுள்ளனர்.

உலகம் முழுவதும் மைக்ரோ சொப்ட் நிறுவனத்திற்கு 40 கோடிக்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் இருக்கின்றனர்.

அந்த நிறுவனத்தின் விண்டோஸ் மென்பொருள்தான் உலகம் முழுவதும் ஏராளமானோர் பயன்படுத்தி வருகின்றனர். தற்போது மைக்ரோ சொப்ட் விண்டோஸ் செயல்பாட்டில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

திடீரென்று பல்வேறு பயனர்களின் கணினி திரை நீல நிறமாக மாறி, ரீ-ஸ்டார்ட் ஆகி வருகிறது. இப்படியான சிக்கலுக்கு ப்ளூ ஸ்க்ரீன் ஆப் டெத் என்று பெயர்.

மேலும் மைக்ரோ சொப்ட் 365, ஓடீழூ, முரவடழுழம ஆகியவை செயலிழந்துள்ளது.

இந்த பாதிப்புகெல்லாம் காரணம் ஊசழறனளவசமைந அப்டேட் தான் எனக் கூறப்படுகிறது. CrowdStrike என்பது அமெரிக்காவில் உள்ள சைபர் செக்யூரிட்டி சாப்ட்வேர் நிறுவனமாகும்.

இந்த நிறுவனம் மைக்ரோ சொப்ட் நிறுவனம் மட்டுமின்றி பல முன்னணி நிறுவனங்களுக்கு இணைய பாதுகாப்பு சேவையை வழங்கி வருகிறது.


இந்நிலையில் CrowdStrike மென்பொருளின் அப்டேட்தான் மைக்ரோ சொப்ட் நிறுவனத்தின் மென்பொருள் பாதிப்புக்கு காரணம் என டெல் டெக்னாலஜிஸ் நிறுவனம் கூறுகிறது.

CrowdStrike இன் ஃபால்கன் சென்சார் செயலிழந்து விண்டோஸ் சிஸ்டத்துடன் முரண்பட்டதால் தரமற்ற அப்டேட் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஒப்புக்கொண்ட நிறுவனம் இந்தச் சிக்கலைத் தீர்க்க எங்கள் பொறியாளர்கள் தீவிரமாகச் செயல்பட்டு வருகின்றனர் என்றும், இதற்காக யாரும் சப்போர்ட் டிக்கெட்டை அணுக வேண்டாம் எனவும் கூறியுள்ளது.

மேலும் பிரச்னை சரிசெய்யப்பட்டதும் பயனர்களுக்கு அறிவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

அதுமட்டுமின்றி இந்த பிரச்னைக்கு சைபர் தாக்குதல் காரணம் இல்லை எனவும் தெரிவித்துள்ளது.



கனடா முரசு
பக்கங்கள் 05
சனிக்கிழமை 20/07/2024

## புதிய தொழில் அமைச்சராக நேற்று ஸ்டீவன் மெக்கினன் பதவியேற்றார்


ஒன்ராரியோ, ஜூலை 20

புதிய தொழில் அமைச்சராக ஸ்டீவன் மெக்கினன் நேற்று பதவியேற்றார்.

ஆளுநர் நாயகத்தின் உத்தியோகபூர்வ இல்லத்தில்

02

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் விமான விபத்தில் 2 பேர் பலி




பிரிட்டிஷ் கொலம்பியா, ஜூலை 20

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தில் இடம்பெற்ற சிறியரக விமான விபத்து சம்பவம் ஒன்றில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணத்தின் டொபினோ பகுதியில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

02



# உலகளாவிய தொழில்நுட்ப செயலிழப்புகளின் பாதிப்பை கனடியர்களும் எதிர்கொள்கின்றனர்

ஒன்ராரியோ, ஜூலை 20

பல தொழில் செயல்பாடுகளை சீர்குலைக்கும் உலகளாவிய தொழில்நுட்ப செயலிழப்பை கனடியர்களும் எதிர்கொள்கின்றனர்.

உலகளாவிய தொழில்நுட்ப செயலிழப்பால் விமான நிறுவனங்கள், வங்கிகள், சுகாதாரப் பாதுகாப்பு செயல்பாடுகள், எல்லைக் கடவைச் சேவைகள் கனடாவின் பல்வேறு பகுதிகளில் நேற்று வெள்ளிக்கிழமை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த தொழில்நுட்ப செயலிழப்பால் கனடாவில் விமானங்கள் பல தரையிறக்கப்பட்டுள்ளன, மருத்துவமனை சேவைகள் சீர்குலைந்துள்ளன, எல்லைக் கடவை சேவைகளை அது பாதித்துள்ளது.

கனடாவின் மிகப்பெரிய மருத்துவமனை வலைப் பின்னல்களில் ஒன்றான பல்கலைக்கழக சுகாதார வலையமைப்பும் செயலிழப்புகளை அறிவித்துள்ளது.

விமான நிறுவனங்களுடன் விமான சேவைகளை உறுதிப்படுத்துமாறு கனடா முழுவதும் உள்ள விமான நிலையங்கள் பயணிகளுக்கு அறிவுறுத்தியுள்ளன.

டொரன்டோ பியர்சன் சர்வதேச விமான நிலையத்தின் செயல்பாடுகள் சில பாதிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

எயார் கனடா,

02




# மென்பான வகைகளை உட்கொண்ட இருவர் சாவு
# 12 பேருக்கு லிஸ்ட்ரியோஸ் என்ற நோய்த் தொற்று

ஒன்ராரியோ, ஜூலை 20
பால் மற்றும் தாவரங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் மென்பான வகைகளை உட்கொண்ட இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர் எனக் கனடிய சுகாதார முகவர் நிறுவனம தெரிவித்துள்ளது.

இதேவேளை, இந்தப் பான வகைகளை அருந்திய 12 பேருக்கு லிஸ்ட்ரியோஸ் என்ற நோய்த் தொற்று தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஒருவகை பாக்டீரியா தாக்கத்தினால் இவ்வாறு மரணங்கள் சம்பவித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

சில்க் மில்க், ஆல்மெண்ட் மில்க், கொகனட், மில்க் ஆல்மண்ட், கொகனட் மில்க், ஆல்மன்ட் மில்க் ஆகிய மென்பான வகைகள் இந்த மாத ஆரம்பத்தில் சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்பட்டன.

ஆபத்தான பொருள்கள் இந்த பானங்களில் காணப்படுவதாகக் கூறி குறித்த மென்பான வகைகள் சந்தையில் இருந்து மீள பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மதுபான வகைகளை இந்த மென்பான வகைகளை உட்கொண்ட இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ள நிலையில் இந்த மரணங்கள் தொடர்பிலான மேலதிக விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

ஆய்வுக்கூட பரிசோதனைகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளதாக கனடிய பொது சுகாதாரம் முகவர் நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒன்ராரியோ, கியூபெக், நோவா ஸ்கொசியா போன்ற பகுதிகளில் இந்த நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 2023 ஆகஸ்ட் மாதம் முதல் இந்த ஆண்டு ஜூலை மாதம் வரையில் இந்தப் பான வகைகளை அருந்திய மக்கள் நோய்வாய் பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.



## புதிய தொழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இந்த பதவியேற்பு நிகழ்வில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ பங்கேற்றிருந்தார்.

அரசியலில் இருந்து விலகவுள்ளார் எனத் தொழிலாளர் அமைச்சர் சீமஸ் ஓ'ரெகன் அறிவித்த நிலையில் புதிய அமைச்சர் நியமிக்கப்பட்டார்.

## பிரிட்டிஷ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லோங் பீச் விமான நிலையத்திலிருந்து விபத்து குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

விமான நிலையத்தின் ஓடுபாதையில் விமானம் தீ பற்றி கொண்டது.

ஆறு பேர் பயணிக்க கூடிய ஓர் சிறிய விமானத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. விமானம் புறப்பட்டு செல்ல எத்தனித்த போது விமானத்தின் இயந்திரத்தில் தீ பற்றி கொண்டதாகக் கூறப்படுகிறது.

விபத்தில் காயமடைந்த ஒருவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனைய இருவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்து விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விமான விபத்து தொடர்பில் கனடிய போக்குவரத்து பாதுகாப்பு சபை விசாரணைகளை ஆரம்பித்துள் ளது.

விமானத்திற்கான விமான விபத்திற்கு சரியான காரணங்கள் இது வரையில் கண்டறியப்படவில்லை.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் ஆள் அடையாள விவரங்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

## உலகளாவிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெஸ்ட்ஜெட், சன்விங்க, பிளயார் போன்ற விமான சேவைகளில் பாதிப்புகள் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் பிரதான அமெரிக்க விமான சேவைகள் பாதிப்புகளை எதிர்கொள்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டது.

நியூபவுன்லாந்து மற்றும் லெப்ரடோர் மாகாண அரசாங்கம் அதன் இணையத் தளங்களை பயன்படுத்துபவர்க ளுக்கு சாத்தியமான சேவை இடையூறுகள் குறித்து எச்சரித்துள்ளது.



# கனடாவில் பணம் அல்லது சொத்தை தொலைத்தவர்களுக்கான அறிவிப்பு

கனடாவில் பணம் அல்லது வேறும் சொத்துக்களை தொலைத்த வர்களுக்கு விசேட அறிவிப்பு வெளியி டப்பட்டுள்ளது.

தொலைக்கப்பட்ட, கைவிடப்பட்ட அல்லது மறந்து போன சொத்துக்களை மீளப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டா மாகாண அரசாங்கம் இது தொடர்பிலான அறிவிப்பினை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு உரிமை கோரப்படாத 154 மில்லியன் டொலர் பெறுமதியான பணம் மற்றும் சொத்துக்கள் காணப்ப டுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2023ம் ஆண்டில் இவ்வாறு 1.4 மில்லியன் டொலர் பெறுமதியான உரிமை கோரப்படாத பணம் 650 பேருக்கு மீள வழங்கப்பட்டுள்ளது.

அல்பேர்ட்டாவின் உரிமை கோரப் படாத சொத்து பதிவு புத்தகத்தில் இந்த தகவல்கள் பதியப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிலருக்கு தாங்களுக்கு இவ்வாறு பணம் அல்லது சொத்துக்கள் இருப் பதே தெரியாது என மாகாண நிதி அமைச்சர் நேட் ஹோர்னர் தெரிவிக் கின்றார்.

கடந்த 2008ம் ஆண்டு முதல் இது வரையில் 8,500 பேருக்கு 14 மில்லியன் டொலர் பணம் மீள வழங்கப்பட் டுள்ளது.

தொலைந்த பணத்தை உரிமை கோருவதற்கு பத்தாண்டு கால அவகாசம் உண்டு என தெரிவிக்கப்பட் டுள்ளது.

# கனடாவில் வீட்டு விலைகள் குறைவடையும் சாத்தியங்கள்



கனடாவில் எதிர்வரும் மாதங்க ளில் வீடுகளின் விலைகள் குறை வடையும் சாத்தியங்கள் காணப்படு கின்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கனடாவில் வீட்டு அடகுக் கடன் தொகை வெகுவாக அதிகரித்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படு கின்றது.

இதனால் வீட்டு உரிமையாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் அதிக எண்ணிக்கையான வீட்டு உரிமையாளர்கள் தங்கள் வீடு களை விற்பனை செய்வதற்கான முனைப்புக்களில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஒரு தசாப்த காலத்தில் பாதிவாகாத அளவிற்கு தற்பொழுது வீட்டு விற்பனை குறித்த பட்டியல்க ளில் பல வீடுகள் விற்பனைக்காக பட்டியலிடப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

வீடுகளுக்கான நிரம்பல் அதி கரிக்கும் நிலையில் வீட்டு விலை களில் வீழ்ச்சி ஏற்படக் கூடும் என வீட்டுமனை சந்தை நிபுணர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

அடகுக் கடன் தொகை அதிகரிப் பினை சமாளிக்க முடியாத கார ணத்தினால் வீடுகள் இவ்வாறு விற் பனை செய்யப்படக்கூடிய சாத்தியம் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின் றது.




# கனடாவில் கல்வி கற்பதற்கு வருபவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதி உறுதியில்லை

கனடாவில் கல்வி கற்க வாய்ப்புக் கிடைத்தால், கல்வி கற்றபின் எப்படியாவது கனடாவில் குடியுரிமை பெற வேண்டும் என்ற நோக்கத்தில்தான் கனடாவுக்கு கல்வி கற்க பல நாட்டவர்கள் வருகிறார்கள் என்பது அனைவரும் அறிந்த விடயம்.

சொல்லப்போனால், கனடாவுக்கு கல்வி கற்க வந்தால், எக்ஸ்பிரஸ் நுழைவு மூலமாக நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறலாம் என்றே கனடா அரசு விளம்பரம் செய்துவருகிறது.

ஆனால், கனடாவின் புலம்பெயர்தல் துறை அமைச்சர் இப்போது வேறு மாதிரியாக பேசுகிறார். சர்வதேச மாணவர்களுக்கு கனடாவில் கல்வி அனுமதி கிடைத்தால், அது, அவர்களுக்கு நிரந்தரக் குடியிருப்பு அனுமதியோ, அல்லது குடியுரிமையோ கிடைப்பதற்கான அத்தாட்சி அல்ல என்று கூறியுள்ளது கனடா அரசு.

அதாவது, கல்வி விசா, நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறுவதற்கான வழிமுறை அல்ல என எச்சரித்துள்ளது கனடாவின் புலம்பெயர்தல், அகதிகள் மற்றும் குடியுரிமை அமைப்பு.

கனடா புலம்பெயர்தல் அமைச்சரான மார்க் மில்லர் கூறும்போது, சர்வதேச மாணவர்களுக்கு கல்வி கற்க விசா கொடுக்கப்பட்டால், அது அவர்களுக்கு கனடாவில் நிரந்தரக் குடியிருப்பு அனுமதி பெறுவதற்கான வழிமுறை என்று உறுதியளிப்பதாக பொருள் அல்ல என்று கூறியுள்ளார்.

கல்வி கற்க பிறநாடுகளிலிருந்து கனடாவுக்கு வருபவர்கள், கல்வி கற்றபின் தங்கள் சொந்த நாட்டுக்கு திரும்பிச் செல்வதுடன், தாங்கள் கற்ற திறனை தங்கள் நாட்டுக்காக பயன்படுத்தவேண்டும் என்றும் கூறியுள்ளார் மார்க் மில்லர்.

# ஒன்ராரியோவில் மது விற்பனைக் கடைகள் செவ்வாய்க்கிழமை முதல் மீண்டும் திறக்கும்?

## எல்.சீ.பீ.ஓ. தற்காலிக உடன்பாட்டை எட்டியது

ஒன்ராரியோ, ஜூலை 20


ஒன்ராரியோவில் வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான தற்காலிக உடன்பாட்டை எல்.சீ.பீ.ஓ. எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் கடந்த இரண்டு வாரங்களாக முடப்பட்டிருந்த கடைகள் வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் திறக்கப்படும் சாத்தியக்கூறு தோன்றியுள்ளது.

சுமார் 10,000 ஊழியர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கத்துடன் எல்.சீ.பீ.ஓ. ஒரு தற்காலிக உடன்பாட்டை நேற்று எட்டியுள்ளது.

இது செவ்வாய் முதல் கடைகள் மீண்டும் திறக்க வழிவகை செய்கிறது.

இந்த தற்காலிக ஒப்பந்தத்தை எல்.சீ.பீ.ஓ. நேற்று அறிவித்த போதிலும், ஒப்பந்தத்தின் விவரங்கள் வெளியிடப்படவில்லை.




இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டால் வேலை நிறுத்தம் திங்கட்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு முடிவுக்கு வரும் என கூறப்படுகிறது

இதன் மூலம் விற்பனை நிலையங்கள் மறுதினம் விற்பனைக்காக மீண்டும் திறக்கப்படும்.

இந்த ஒப்பந்தம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் அது குறித்த விவரங்கள் பகிரப்படும் என எல்.சீ.பீ.ஓ. கூறுகிறது.



# பலஸ்தீனம் மீதான ஆக்கிரமிப்பு பற்றிய ஐ.நா. தீர்ப்பு கனடாவின் கவனத்திலாம்!

ஒன்ராரியோ, ஜூலை 20

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேல் இருப்பது சட்டவிரோதமானது என்ற ஐ.நா.வின் உயர்மட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பை 'கவனத்தில் எடுத்துக் கொண்டதாக' கனடா மத்திய அரசு கூறுகிறது.

1967 இல் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் நிரந்தர இஸ்ரேலிய கட்டுப்பாட்டை அங்கீகரிக்காதது தொடர்ச்சியான கனேடிய அரசாங்கங்களின் நிலைப்பாடாகும் என்று கனடாவின் உலகளாவிய விவகாரங்களுக்கான செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

சட்ட விரோதமான குடியேற்றங்கள் இப்பகுதியில் நீதியான மற்றும் நீடித்த அமைதிக்கு தடையாக இருக்கின்றன என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இஸ்ரேலின் பிரசன்னம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் குடியேற்றக் கட்டுமானம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா. நீதிமன்றம் கூறியுள்ளது.

பிராந்தியங்களில் இறையாண்மைக்கு இஸ்ரேலுக்கு உரிமை இல்லை என்றும், வலுக்கட்டாயமாக பிரதேசத்தை கையகப்படுத்துவது சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

# மொன்றியலில் இடைத் தேர்தல்!

கியூபெக், ஜூலை 20

மொன்றியலின் லாசலே-எமர்ட்-வெர்டுன் தொகுதி இடைத்தேர்தலில் நகர சபை உறுப்பினர் லாரா பாலஸ்தீனி லிபரல் கட்சி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

2015 முதல் இந்த ஆண்டு தொடக்கம் வரை இந்த தொகுதிக்கான நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த இருந்த முன்னாள் நீதி அமைச்சர் டேவிட் லாமெட்டி பதவி விலகியமையால் அந்த இடம் காலியாக உள்ளது.

போரோ நகரசபை மற்றும் மொன்றியல் நகர சபையில் அந்த தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்திய பாலஸ்தீனி, பொதுப் போக்குவரத்து மற்றும் மலிவு விலை வீடுகள் போன்ற 'முற்போக்கான முன்னுரிமைகளுக்கு' வாதிடுபவர் என லிபரல் கட்சி கூறுகிறது.

கன்சர்வேடிவ் கட்சி தனது வேட்பாளர் சிறு வணிக உரிமையாளர் லூயிஸ் ஜலண்டி என்று அறிவித்துள்ளது.

அதேவேளை, புதிய ஜனநாயகக் கட்சியின் நகர உறுப்பினராக இருக்கும் கிரேக் சாவ் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுகின்றார்.

ஜூலை 30 ஆம் தேதிக்குள் இடைத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று கனடா தேர்தல்கள் கூறியுள்ள போதிலும், செப்ரம்பர் 16ஆம் திகதியே தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

